Tamil Nadu Legislative Council Debates

THIRTY-THIRD SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

1ST, 3RD TO 8TH, 10TH AND 11TH MARCH 1969.

3897

VOLUME LXXIX (Nos. 1 to 9).

TABLE OF CONTENTS.

Saturday, 1st March 1969.

	PAGES.
Personnel of the Government of Tamil Nadu ...	i–ii
Principal Officers of the Tamil Nadu Legislative Council	iii
List of Members of the Tamil Nadu Legislative Council with their constituencies	iv-v
I. Questions and Answers	1–18
II. Announcement *re*—	
(1) Messages from the Assembly	18
(2) Decision of the Business Advisory Committee	19
III. Presentation of the Budget for 1969–70 ...	20–26
Monday, 3rd March 1969.	
I. Questions and Answers	131–150
II. Announcement *re* message from the Governor ...	150
III. Government Bills—	
(1) The Tamil Nadu Appropriation Bill, 1969 (L.A. Bill No. 6 of 1969)	150
(2) The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1969 (L.A. Bill No. 7 of 1969)	150–151

PAGES.

Monday, 3rd March 1969—cont.

(3) The Madras Panchayats (Amendment) Bill, 1969 (L.A. Bill No. 5 of 1969) 151–153

(4) The Madras General Sales Tax (Amendment) Bill, 1969 (L.A. Bill No. 1 of 1969) 153–154

(5) The Madras General Sales Tax (Second Amendment) Bill, 1969 (L.A. Bill No. 2 of 1969) 154–155

(6) The Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1969 (L.A. Bill No. 18 of 1969) 155–183

IV. Motion under rule 21 (3) of the Council Rules (Change in the order of business) 151

V. General discussion on the Budget for 1969–70 ... 183–194

VI. Papers laid on the table of the House 194

Tuesday, 4th March 1969.

I. Questions and Answers 217–232

II. Adjournment motion *re* cane charge on demonstrators at Madurai 233–234

III. Calling attention to failure of monsoon in Tindivanam and Gingee taluks and remission of land tax, etc. 235

IV. Government Motion—

Amendment to Madras Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965 235–236

V. General discussion on the Budget for 1969–70—*cont.* 236–239

Wednesday, 5th March 1969.

I. Questions and Answers 271–286

II. Calling attention to shortage and orders of recovery of special pay paid to Second Grade Hindi and Sanskrit Pandits posted as teachers in Panchayat Elementary Schools in Thanjavur District 286–287

III. General discussion on the Budget for 1969–70 —*cont.* 287–328

PAGES.

Thursday, 6th March 1969.

I. Questions and Answers 329–337

II. Ruling on a Member's reference to D.M.K. Members of Parliament 337

III. General discussion on the Budget for 1969–70 —*cont.* 337–369

IV. Papers laid on the table of he House ... 370

Friday, 7th March 1969.

I. Questions and Answers 371–383

II. General discussion on the Budget for 1969–70 —*cont.* 383–430

Saturday, 8th March 1969.

I. Questions and Answers 431–436

II. General discussion on the Budget for 1969–70 —*cont.* 436–493

Monday, 10th March 1969.

I. Questions and Answers 495–507

II. Quotation in the Assembly of a Member's speech in the Council 507–508

III. General discussionon the Budget for 1969-70 —*cont.* 508–567

Tuesday, 11th March 1969.

I. Expression of sorrow at the demise of Thiru Darbari Lal Sharma, Chairman, Uttar Pradesh Legislative Council 569

II. Questions and Answers 569–586

III. Calling attention to hardship caused to M.B.B.S. Final-Year students on the abolition of September Examination in the University Examinations. 586

PAGES.

IV. Government Motions—

(1) Election of nine Members to the Committee of Privileges 586–587

(2) Election of six Members to the House Committee 587–588

V. General discussion on the Budget for 1969–70 —cont. 588–639

VI. Papers laid on the table of the House 639

Index 641–672

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம். இம் மாநாடு 1968-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெற்றது.

(இ) உயர்நிலை உடற்கல்வி ஆசிரியர்களில் சம்பள விகித உயர்வுகான கோரிக்கை ஏற்றுகொள்ள முடியவில்லை. இருந்த போதிலும் உயர்நிலை சான்றிதழ்ப் பெற்றுள்ள உடற் கல்வி ஆசிரியர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற தனிச் சம்பள மாகிய ரூ. 5, 10 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

THIRU G. KRISHNAMOORTHY : Thanks to the Government.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, மாநாட்டினர் வேண்டிக் கொண்ட சம்பள உயர்வு விதம் எவ்வளவு? அரசு வழங்கியது எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : மாநாடு சம்பள விகிதத்தையே மாற்றியமைக்க விரும்புகிறது. 1960-ல் பே-கமிஷன் அனுமதித்த சம்பளத்தை நாம் கொடுக்கிறோம். ஆகையால் இப்போது சம்பள விகிதத்தை மாற்றத் தயாராக இல்லை. கொடுக்கிற அலவன்ஸ் ஹையர்கிரேடுக்கு ரூ. 5-லிருந்து 10-க்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.

Language Teachers.

* 102 Q.—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of Thiru M. Rajah Iyer) : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the alternative arrangements made by the Government for employing the language teachers, who have lost their jobs consequent on the implementation of the Two-language formula in schools?

(THE HON. THIRU S. MADHAVAN : Orders have been issued—

(1) for the absorption of the existing qualified Hindi and ohter language Pandits in regular service in suitable alternate posts;

(2) for the conduct of in-service ttaining for Pandits, Grades I and II who have passed S.S.L.C. but do not have secondary grade training, so as to enable them to appear for the T.S.L.C. (Secondary Grade) ;

(3) for giving protection of their scale of pay in whatever capacity they are absorbed.

(1) இப்போதுள்ள தகுதி பெற்ற இந்திப் பண்டிதர்களையும் பிறமொழிப் பண்டிதர்களையும் தகுந்த மாற்றுப் பதவிகளில் பண்டிதர்களுக்குப் பணியிருப்புப் படிற்சியளிக்கவும்;

(2) அவர்கள் டி.எஸ்.எல்.சி (இடைநிலைத்தரம்) தேர்விற்குச் செல்லும் வகையில் இடைநிலைத்தரப் பயிற்சி பெறுத, ஆனால் எஸ்.எஸ்.எல்.சி. தேர்சசி பெற்ற I, II-ம் நிலையைச் சேர்ந்த பண்டிதர்களுக்குப் பணியிருப்புப் பயிற்சியளிக்கவும்;

(3) அவர்கள் எந்தப் பணியில் வேலைக்கமர்த்தப்படினும் அவர்களின் சம்பள விகிதம் பாதிக்கப்படாமல் பாதுகாப்பளிப்படதற்கும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

THIRU G. KRISHNAMOORTHY : Will the Government give me the number of unqualified or partly qualified part-time and full-time teachers who have been sent out ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : புதிய திட்டத்தால் பாதிக்கப்படுகிற மொழி பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் எண்ணிக்கை 263; அவர்களுக்குப் பின்னல் அரசாங்கம் உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்ற உத்தேசத்தில் இருக்கிறது. 175 பேர் திரும்ப வேலையில் வைக்கப்பட்டுள்ளனர். 1,729 பேருக்கு மாற்று வேலை கொடுக்கப்பட்டது. 16 பேர் போதிய படிப்பு (unqualified) இல்லாதவர்களாக இருந்தாலும், மாற்றுவேலை தரப்பட்டது. மீதமுள்ளவர் (unqualified) 653 பேர்கள்.

THIRU G. KRISHNAMOORTHY : In view of the large provision made in the Budget, Sir, for new teachers, will the Government consider the proposal just to give relief to these teachers also subject to the condition of getting in-service training, etc., for Secondary Grade teachers?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : ஏற்கனவே இருப்பவர்களுக்கு சர்வீஸ்-இன்-டிரெயினிங் கொடுத்து அந்த வேலை உறுதிப்படுவதற்கு மாற்று முறை வகுக்கப்பட்டது. வேண்டிய படிப்பு இல்லாதவர்கள், பார்ட்-டைம் ஆக இருந்தவர்கள் போன்றவர்களுக்கு, எந்தெந்த முறையில் வேலை வாய்ப்புக் கொடுக்க முடியுமோ அதைக் கொடுக்க முயற்சிக்கப்படுகிறது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : பணியிருப்புப் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டு, இறுதியில் தேர்வு எழுத அனுமதிக்கப்படாமல் இருந்தவர்கள் எத்தனை பேர்? பயிற்சி இல்லாமல் வேறு பணி பார்த்துக் கொடுக்கப்படாமலும் இன்னும் சம்பளம் வாங்காமலும் இருக்கிறவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : 1,750 பேர் வேலையிலிருந்து போகாமல் வைக்கப்பட்டு, அந்த இடைக் காலத்தில் அவர்கள் இந்தப் பயிற்சி பெறலாம் என்றுதான் வைத்திருக்கிறது.

Uniform for teachers

* 103 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether any decision was taken at the meeting of the State Educational Advisory Committee regarding uniform for teachers; and

(*b*) if so, the details thereof ?

6th March 1969]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்த நெல் உலர்த்தும் இயந்திரம் ஒன்றை நிறுவுவதற்கு ரூ. 1,91,000 செலவாகிறது. மொத்தம் ரூ. 87,32,000 செலவானது. ஒரு நாளைக்கு 160 டன் நெல் உலர்த்தலாம்.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் அமைத்துள்ளதைப் போல நெல் உலர்த்தும் இயந்திரத்தை மதுரை மாவட்டத்திலும் ஏற்படுத்த அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மதுரைக்கு அது தேவையில்லை. தஞ்சையைப் பொறுத்தவரையில் குறுவை அறுவடை சமயத்தில் ஈரம் காக்கிறது என்ற காரணத்தால், அந்த ஈரத்தை உலர்த்தி உடனடியாக மற்ற இடங்களுக்கு அனுப்ப வேண்டியிருப்பதால் நெல் ஈரத்தால் மூளைத்துவிடாமல் பாதுகாப்பதற்காகத்தான் தஞ்சையில் அது வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. வி. தேவராஜ முதலியார் : வட ஆற்காடு மாவட்டம் தஞ்சைக்கு அடுத்தபடி நெல் உற்பத்தி செய்யப்படும் இடம். ஆகையால் அந்த மாவட்டத்தில் ஒரு உலர்த்தும் இயந்திரம் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்த நெல் உலர்த்தும் இயந்திரம் வட ஆற்காட்டிற்குத் தேவையில்லை.

திரு. எஸ். ஆர். தியாகராஜன் : கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட இந்த இயந்திரத்தில் ஒரு நாளைக்கு 160 டன் தான் உலர்த்தமுடிகிறது. மாதத்திற்கு 4,500 டன், ஒரு வருஷத்திற்கு 50 ஆயிரம் டன் தான் உலர்த்த முடியும். ஆனால் தஞ்சையில் 8 லட்சம் டன்னுக்கு மேலாகக் கொள்முதல் செய்கிறோம். ஆகையால் 50 ஆயிரம் டன் நெல்லுக்காக ஒரு கோடி ரூபாய் செலவில் இயந்திரம் அமைக்க வேண்டுமா? அதனால் ஏற்படும் வட்டி நஷ்டம் எவ்வளவு என்பதை அரசு ஆராய்ந்ததா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது இந்திய ஃபுட் கார்ப்பரேஷனால் அமைக்கப்படுவது. நாம் செய்வதல்ல. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ரூ. 2,91,000-த்தை ரூ. 1,91,000 என்று குறைத்துக் கணக்கிட்டார்கள். அதைக் கூட்டி கணக்குப் போட்டு மத்திய அரசுக்கு வேண்டுமானால் உறுப்பினர், ஆலோசனை சொல்லலாம்.

Hindi Pandits

*138 Q.—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(a) whether any permanent Hindi Pandits employed in the Service Homes under the Women's Welfare Department, have been ousted from service consequent on the language policy of the Government; and

(b) if so, whether any alternative employment has been given to such affected teachers?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Correspondents of aided high schools

*139 Q.—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether Correspondents of Aided High Schools have authority to interfere in the acadmic work and the internal administration of schools ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) & (இ) இயல்பாகத் தலையிடுவதில்லை. ஆனால், முறைகேடான செயல்கள் நிகழ்ந்து வருவதாகக் கவனிக்கப்படும்பொழுதும், பள்ளியின் வேலை புறக்கணிக்கப்படும்பொழுதும், பள்ளி ஒழுங்காகப் பேணிவரப் படுவதற்கும், பள்ளி ஏற்பு மானியம் நிபந்தனைகள் நிறைவேற்றப் படுவதற்கும், அவ்வப்போது முடிவு செய்யப்படுகிற ஒழுங்கு விதிகள் செயல்படுத்தப்படுவதற்கும் பொறுப்புள்ள பள்ளித் தொடர்பாளர் அவ்வாறு தலையிட்டுக் குறைகளை நீக்கலாம்.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, அப்படி ஏதாவது தமிழ் நாட்டிலுள்ள பள்ளிகளில் நடந்து, அரசு தலையிட்டு, அந்த நிர்வாகஸ்தர்களை அப்பதவிப் பொறுப்பிலிருந்து நீக்குவதற்கு ஏற்பாடு செய்ததுண்டா ? ஏதேனும் அப்படி நிகழ்ச்சிகள் இருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தகவல் இல்லை.

Book published during World Tamil Conference

*140 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the books and reports published by the Director of Tamil Development in his capacity as the Secretary-General of the World Tamil Conference at the cost of the conference ;

(*b*) the price at which each of them was sold ;

(*c*) the number of copies published in each ; and

(*d*) the names of the persons to whom these were distributed free of cost ?

உலகத் தமிழ் மாநாட்டு விழா மலர்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உலகத் தமிழ் மாநாட்டுச் செலவில் தமிழ் வளர்ச்சி இயக்குநரால் மாநாட்டு அமைப்புச் செயலாளர் என்னும் முறையில் என்னென்ன புத்தகங்கள், அறிக்கைகள் வெளியிடப் பட்டன?

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, அவை அச்சிடப்பட்டு வழங்கப்பட்டனவா ? விலைக்கு விற்கப்பட்டனவா ? அப்படி விற்றதால் எவ்வளவு லாபம் கிடைத்தது ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: அரசாங்கத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இது ஒரு இந்திய அமைப்பு. மத்திய அரசு மூலமாக யுனெஸ்கோ அனுப்புவது. அதை நாம் கொடுத்தோம்.

Official language

• 142 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the resolution passed regarding the medium of instruction and the official language at the State Education Ministers' Conference held at Delhi, recently; and

(*b*) the views expressed by the Tamil Nadu Education Minister on behalf of the Government of Tamil Nadu?

ஆட்சி மொழி.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) அண்மையில் டில்லியில் நடைபெற்ற மாநில கல்வி அமைச்சர்கள் மாநாட்டில், பயிற்சி மொழி, ஆட்சி மொழி பற்றி என்ன தீர்மானம் நிறைவேற்றப் பட்டது ?

(இ) தமிழக அரசு சார்பாக கல்வி அமைச்சரால் என்ன பேசப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) உயர்நிலைக் கல்வி நிறுவனங்கள் எல்லாவற்றிலும் வட்டார மொழியையே பயிற்சி மொழியாகக் கொள்ளவேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. ஆட்சிமொழி குறித்துத் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

(இ) வட்டார மொழியே எல்லா நிலையிலும் பயிற்சி மொழியாக இருக்கவேண்டுமென்கிற பரிவுரை இம்மாநில அரசின் முழு இசைவுபெற்றுள்ளதென அம்மாநாட்டில் எடுத்துக் கூறப் பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, மத்திய சர்வீஸ் கமிஷன் பரீட்சை 14 மொழிகளிலும் எழுதலாம் என்று கூறியதாகச் செய்தி பத்திரிகையில் வந்தது. அதைப் பற்றிப் பேசப்பட்டது. அதைப் பற்றி இந்த அரசு என்ன நினைக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: மகாநாட்டில் பேசியதைப் பற்றித் தகவல் இல்லை. 14 மொழிகள் வருமென்று மத்திய அரசு நீண்டநாளாகச் சொல்லிவருகிறது.

6th March 1969]

Tamil as official language in Secretariat

*143 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the names of the Departments where Tamil has been introduced as official language in the Tamil Nadu Secretariat?

தலைமைச் செயலகத்தில் தமிழில் நடவடிக்கை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தலைமைச் செயலகத்தில் எந்தெந்தத் துறைகளில் தமிழில் நடவடிக்கைகள் நடத்தப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : சட்டம், சட்டமன்றம், சட்டப் பேரவை, நிதி ஆகிய துறைகள் நீங்கலாக மற்ற எல்லாத் துறைகளிலும் தமிழ்த்திட்டத்தின் முதல் நிலை 1—5—1966 முதல் செயற்பட்டு வருகின்றது. இதன்படி பொதுமக்களிடமிருந்து தமிழில் வரும் கடிதங்களுக்குத் தமிழிலேயே பதிலளிக்கப்பெறும்.

(2) தமிழ் வளர்ச்சித் துறையின் எல்லாப் பிரிவுகளிலும் செய்தி விளம்பரத்துறையிலும் தமிழ்த்திட்டம் முழு அளவில் செயற்படுத்தப் பெற்றுள்ளது. மேற்குறிப்பிட்ட இரு துறைகளிலும் பொதுவாக எல்லா நடவடிக்கைகளும் தமிழிலேயே நடத்தப் பெறுகின்றன.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, சட்டத் துறையிலும் நடவடிக்கைகள் தமிழிலேயே நடத்துவதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்படுகின்றனவா ? குறிப்பாக சட்டப் புத்தகங்கள் தமிழில் அச்சிடப்பட்டு வினியோகிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இதற்குச் சட்டச் சொற்கள் ஒரே மாதிரியாக அமைக்கப்பட வேண்டுமென்று கருத்து சொல்லப் பட்டு ஒரு குழு அமைக்கபட்டு அந்தக் குழு சட்டச் சொற்களை உருவாக்கி இருக்கிறது. அப்புத்தகம் சில நாட்களில் வெளியிடப் படும். அந்தக் கிளாசரி முடிந்துவிட்டால், அந்த அடிப்படையில் மசோதாக்கள் எல்லாம் தயார் செய்வதற்குக் குழு அமைத்திருக் கிறோம். சில நாட்களில் பல நீதிபதிகளின் தலைமையில் அது நடைபெற இருக்கிறது.

திரு. என். ஆர். தியாகராஜன்: இப்போது வெளியிடப்படும் ஃபோர்ட் செயிண்ட் ஜார்ஜ் கெஜட் 90 சதவிகிதத்திற்கு மேலாக ஆங்கிலத்திலேயே அச்சடிக்கப்பட்டு வருகிறது. அதை முழுவதும் தமிழிலேயே அச்சடித்து அனுப்புவதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தமிழில் எங்கெங்கே சாத்தியப்படுகிறதோ அங்கெல்லாம் அச்சு அடித்துக் கொடுக்கப் படுகிறது. விரைவாக எல்லாத் துறையிலும் அது பின்பற்றப்பட வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை.

[6th March 1969

Official Language Committee

*144 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether the Tamil Nadu Official Language Committee was reorganised recently; and

(b) if so, the names of its members?

தமிழக ஆட்சி மொழிக் குழு

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழக்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தமிழக ஆட்சி மொழிக் குழு அண்மையில் திருத்தி அமைக்கப்பட்டதா?

(இ) ஆமெனில் உறுப்பினர்கள் யார் யார்?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) மாற்றி அமைக்கப்பட்ட ஆட்சி மொழிக்குழு உறுப்பினர்களின் பெயர்கள் பின்வருமாறு :—

(1) திரு. இரா. நெடுஞ்செழியன், கல்வி அமைச்சர், தலைவர்.

(2) திரு. மு. கருணாநிதி, பொதுப்பணி அமைச்சர், துணைத் தலைவர்.

(3) செயலாளர், ஆட்சிமொழிக்குழு, செயலாளர்.

(4) அரசுச் செயலாளர், கல்வித் துறை,
(5) தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர்,
(6) டாக்டர் மு. வரதராசனர்,
(7) திரு. கா. திரவியம் (ஐ.ஏ.எஸ்.),
(8) திரு. கே. இராமலிங்கனர்,
(9) திரு. மா. சண்முகசுப்பிரமணியம்,
(10) திரு. வல்லே. எம். பாலசுப்பிரமணியம்,
(11) திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை, ஐ.ஏ.எஸ். (ஓய்வு), } உறுப்பினர்கள்

Municipal Chairman, Kancheepuram

*145 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether 21 members of the Kancheepuram Municipal Council signed a no-confidence motion against the Kancheepuram Municipal Chairman in May 1968 and submitted it to the Revenue Divisional Officer; and

(b) if so, the reason for the Revenue Divisional Officer not having taken action?

Supervisors of Municipal Elementary Schools

*161 *Q.*—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the raised age of superannuation of 58 is applicable to Supervisors of Municipal Elementary Schools; and

(*b*) if not, the reasons therefor?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) எழவில்லை.

Hindi Teachers

*162 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether alternative employment will be provided to the Hindi Teachers who have lost their jobs as a result of the language policy of the Tamil Nadu Government;

(*b*) the amount of expenditure incurred on these teachers in 1967–68; and

(*c*) the amount of grant sanctioned therefor by the Central Government in 1967-68?

இந்தி ஆசிரியர்கள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக அரசு மொழிக் கொள்கையினால் வேலை இழந்த இந்தி ஆசிரியர்களுக்கு வேறு வேலை அளிக்கப்படுமா ?

(இ) இவர்களுக்கு 1967-68-ஆம் நிதி ஆண்டில் எவ்வளவு செலவானது ?

(உ) மத்திய சர்க்கார் இதற்காக 1967-68-ஆம் நிதி ஆண்டில் உதவியது எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ் மாதவன் : *(அ) ஆம்.*

(இ) ரூ. 38,38,582.

(உ) அதிக ஆசிரியர்களை நியமித்ததின் விளைவாக ஏற்பட்ட செலவாகிய ரூ. 60,814-க்கு இந்திய அரசிடமிருந்து உதவித் தொகை கோரப்பட்டுள்ளது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : *தலைவர் அவர்களே, நிரந்தரமாக்கப்பட்ட இந்தி ஆசிரியர்களுக்கு மாற்று வேலை கொடுக்கப்படுவதாகக் கூறினார்கள். இரண்டு மூன்று வருஷங்களாக வேலை தொடர்ந்து பார்த்து வரும் ஆனால் நிரந்தரம் பெறுத இந்தி ஆசிரியர்கள் வேலையிழந்திருக்கிறார்கள். மாநிலம் முழுவதும் 1,000 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கிடைக்கும் வகையில்,*

வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தில் வேலைத் தேடித் தருவதில் அவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இல்லை யென்றால் அப்படிச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: மொத்தம் 2,331 ஆசிரியர்கள். யார் யார் வேலைக்குத் தக்க குவாலிபிகேஷன் பெற்றிருக்கிறார்களோ அவர்களில் 1,279 பேர்களுக்கு வேறு தொழிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. 175 பேர் இதே தொழிலில் Language Teacher. என்ற முறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். temporary ஆக இடைக்காலமாக appointment பெற்றவர்கள், குவாலிபிகேஷன் இல்லாதவர்கள், unqualified Category -ல் வருகிறவர்கள் 667 பேர்கள். அவர்களுக்குக் கூட வாய்ப்பு கிடைக்கிற இடங்களில் வேலை கொடுக்க வேண்டுமென்ற ஆணை பிறப்பித்திருக்கிறோம். 14 பேருக்கு அதிலும் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Hindi Schools

*163 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the policy of the Tamil Nadu Government with regard to the opening of Hindi Schools in Tamil Nadu by the Central Government?

இந்தி பள்ளிகள்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மத்திய அரசு தமிழகத்தில் இந்தி பள்ளிகள் திறப்பதில் தமிழக அரசின் கொள்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: தமிழகத்தில், இந்தி பள்ளிகள் திறப்பதற்கான திட்டம் ஏதும் மத்திய அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, தட்சிண பாரத இந்தி பிரசார சபை மூலமாக இந்திப் பள்ளி திறப்பதற்கு மத்திய அரசு திட்டமிட்டு இருக்கிறது என்பது இந்த அரசுக்குத் தெரியுமா? தட்சிண பாரத இந்தி பிரசார சபை செலவில் மத்திய சர்க்கார் அமைத்துக் கொள்வதில் இந்த அரசுக்கு என்ன ஆட்சேபணை இருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: மத்திய அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாகப் பேசினார். தங்கள் அரசாங்கத்தில் எதுவும் திட்டம் இருப்பதாகச் சொல்லவில்லை. இந்தி பிரசார சபா இந்திப் பள்ளிகளை, பாடங்களை விரிவு படுத்துவதற்கு, எந்த முறையில் செய்கிறார்களோ அதைப் பொருத்து இந்த அரசாங்கம் முடிவு செய்யும்.

வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தில் வேலைத் தேடித் தருவதில் அவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இல்லை யென்றால் அப்படிச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: மொத்தம் 2,331 ஆசிரியர்கள். யார் யார் வேலைக்குத் தக்க குவாலிபிகேஷன் பெற்றிருக்கிறார்களோ அவர்களில் 1,279 பேர்களுக்கு வேறு தொழிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. 175 பேர் இதே தொழிலில் Language Teacher. என்ற முறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். temporary ஆக இடைக்காலமாக appointment பெற்றவர்கள், குவாலிபிகேஷன் இல்லாதவர்கள், unqualified Category -ல் வருகிறவர்கள் 667 பேர்கள். அவர்களுக்குக் கூட வாய்ப்பு கிடைக்கிற இடங்களில் வேலை கொடுக்க வேண்டுமென்ற ஆணை பிறப்பித்திருக்கிறோம். 14 பேருக்கு அதிலும் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Hindi Schools

*163 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the policy of the Tamil Nadu Government with regard to the opening of Hindi Schools in Tamil Nadu by the Central Government?

இந்தி பள்ளிகள்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மத்திய அரசு தமிழகத்தில் இந்தி பள்ளிகள் திறப்பதில் தமிழக அரசின் கொள்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: தமிழகத்தில், இந்தி பள்ளிகள் திறப்பதற்கான திட்டம் ஏதும் மத்திய அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, தட்சிண பாரத இந்தி பிரசார சபை மூலமாக இந்திப் பள்ளி திறப்பதற்கு மத்திய அரசு திட்டமிட்டு இருக்கிறது என்பது இந்த அரசுக்குத் தெரியுமா? தட்சிண பாரத இந்தி பிரசார சபை செலவில் மத்திய சர்க்கார் அமைத்துக் கொள்வதில் இந்த அரசுக்கு என்ன ஆட்சேபணை இருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: மத்திய அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாகப் பேசினார். தங்கள் அரசாங்கத்தில் எதுவும் திட்டம் இருப்பதாகச் சொல்லவில்லை. இந்தி பிரசார சபா இந்திப் பள்ளிகளை, பாடங்களை விரிவு படுத்துவதற்கு, எந்த முறையில் செய்கிறார்களோ அதைப் பொருத்து இந்த அரசாங்கம் முடிவு செய்யும்.

திரு. சா. கணேசன் : மத்திய ஆட்சி இதற்காக 1,65,000 ரூபாய் தட்சிண பாரத் பிரசார சபைக்கு வழங்கியிருப்பதாக செய்திகள் பல பத்திரிகைகளிலும் வந்திருப்பதை அமைச்சர் அவர்களும் கண்டிருக்கக் கூடும். அவர்கள் தொடங்குகிற பள்ளிகளுக்கு வேண்டிய உதவியோ அல்லது ஒத்தாசையோ அல்லது பாது காப்போ அரசு கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இந்தி மொழியைப் பரப்பு தில் ஏராளமான பணம் செலவழிப்பதற்கு மத்திய நிதியமைச்சர் மிகவும் தாராளமாக இருக்கிறார்கள். இந்த அரசாங்கம் அதற் காக எந்த உதவியையும் செய்வதாக இல்லை. அவர்களுடைய செயல் இந்த நாட்டு மக்கள் மனதைப் புண்படுத்தாமல் இருந்தால், அவர்கள் மொழி ஆதிக்கத்தைக் கொண்டுவர முயற்சிக்காமல் இருந்தால், இந்த அரசு அதைப்பற்றிக் கவலைப்படாது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தாங்களாகவே இஷ்டப்பட்டு இந்தி படிப்பதற்கு, தட்சிண பாரத் இந்தி பிரசார சபையில் பயிற்சி பெறுவதற்கு வந்தால், இந்த அரசுக்கு என்ன ஆட்சேபணை இருக்கிறது ? தமிழகத்தில் தமிழைத் தவிர வேறு ராஜ்ய, வேறு நாட்டு மொழிகளைத் தாங்களே கற்றுக் கொடுக்க பள்ளிகளை நடத்தினால் அதில் என்ன ஆட்சேபணை இருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இந்த அரசோ அல்லது இந்த அரசைக் கட்டிக் காக்கும் கட்சியோ எந்த மொழியைப் பயிலு தற்கும் ஆட்சேபிக்கவில்லை. இந்தியை யாரும் படிப்பதில் ஆட்சேபணை இல்லை. அலல் இந்தி படித்தால்தான் இந்த நாட்டில் இருக்க முடியும். இந்திதான் இந்த நாட்டின் ஆட்சி மொழி, நிர்வாக மொழி என்று சொல்லித் தமிழ்நாட்டு மக்களை அடிமை கொள்ள முனைந்தால் அதை இந்த அரசு ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது.

(கைதட்டல்)

திரு. எம். எத்திராஜுலு : இந்தி ஆசிரியர்கள் 600 பேர்கள் இப்போது வேலையில்லாமல் இருக்கிறார்கள். எதையும் கற்பது னிதனுடைய உரிமை. அந்த வேலையற்ற ஆசிரியர்களை வைத்துக் கொண்டு கிராமத்தில் உள்ளவர்கள் பொதுச் செலவிலோ மற்ற வர்கள் செலவிலோ பள்ளிகள் வைத்து நடத்தி இந்தியைக் கற்றுக் கொடுத்தால் அதில் இந்த அரசு குறுக்கிடுமா?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இந்தி ஆசிரியர்களைப் பற்றி போன கேள்வியிலேயே பதில் சொன்னேன். அங்கத்தினர் ஊர் ஊராகச் சென்று பள்ளிகளை ஆரம்பித்தால் அவர் எப்படித் தொடங்குகிறார் என்பதைப் பொருத்து அரசாங்கம் முடிவு செய்யும்.